**சார்பு நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை: திருமதி.A.சண்முகப்பிரியா, பி.எஸ்சி. (Agri) பி.எல்.,**
**சார்பு நீதிபதி, மேட்டூர்**
**2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை**
**இடைநிலை மனு எண்.1/2024**
**இன்**
**இந்து திருமணம் அசல் மனு எண். 108/2023**

லோகேஷ் ... மனுதாரர் / எதிர்மனுதாரர்

/எதிராக/

சிந்துஜா ... எதிர்மனுதாரர் / மனுதாரர்

இம்மனு 03.10.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 05.06.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. K. கோகிலவாணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வெற்றிசெல்வன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர், இம்மனுவை இந்து திருமணச்சட்டம் பிரிவு 26 ன் கீழ் , மனுதாரரின் குழந்தைகள் இளவர் ஜெய் ஆதவ், ஜெய் அகான் இருவரையும் பார்க்க அனுமதியளித்து உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:**

மனுதாரரும் எதிர்மனுதாரரும் கடந்த 31.08.2017 ம் தேதி விருப்பப்பட்டு காதலித்து தங்கமாபுரிப்பட்டினத்தில் உள்ள முருகன் கோவிலில் திருமணம் செய்து கொண்டதாகவும், திருமணம் முடிந்த மறுநாளே இருவரும் கோயம்புத்தூரில் உள்ள எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று அங்கு சுமார் மூன்று மாதங்கள் எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டிலேயே தங்கி இருந்ததாகவும், அந்த

காலகட்டத்தில் எதிர்மனுதாரரின் பெற்றோர் கோயமுத்தூரில் உள்ள அவரது உறவினர்களுடன் பழனி முருகன் கோவிலுக்கு சென்று இரண்டாவது முறையாக மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் செய்து வைத்ததாகவும், பின்பு இரு வீட்டாரின் உறவினர்களும் ஒன்று சேர்ந்து பேசி பின் மேட்டுர் வந்து எடப்பாடியில் உள்ள மனுதாரரின் குல கோவிலில் இருவீட்டாரும் சேர்ந்து மூன்றாவது முறையாக திருமணம் நடத்தியுள்ளனர் என்றும், பின்னிட்டு இருவரும் மேட்டுரில் உள்ள மனுதாரரின் வீட்டில் இரண்டு மாதம் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்ததாகவும், சில பிரச்சனையின் காரணமாக இருவரும் கோயம்புத்தூரில் உள்ள சூலூர்க்கு சென்று விட்டதாகவும், பின்னிட்டு சுமார் இரண்டு மாதங்கள் எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டிலேயே தங்கிவிட்டதாகவும், எதிர்மனுதாரருக்கும் அவரது அம்மாவிற்கும் அடிக்கடி வீட்டில் சண்டை வருவதால் எதிர்மனுதாரரின் அப்பா மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் சுந்தராபுரம் அன்னை வேளாங்கண்ணி நகரில் தனியாக வீடு எடுத்து கொடுத்து தனியாக குடும்பம் நடத்தி வந்ததாகவும், மனுதாரர் LEBON என்ற தனியார் நிறுவனத்தில் 15.03.2018 ல் வேலைக்கு சேர்ந்து சுமார் எட்டு மாதங்கள் பணிபுரிந்து வந்ததாகவும், அக்கால கட்டத்தில் இருவரும் நல்லமுறையில் சந்தோசமாக வாழ்க்கை நடத்தி வந்ததாகவும், இக்காலகட்டத்தில் எதிர்மனுதாரர் கர்ப்பம் தரித்துள்ளார் என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரையும் அவரது வயிற்றில் வளரும் குழந்தையையும் நல்ல முறையில் பராமரித்து பல்லடத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பார்த்து வந்ததாகவும், பின்பு எதிர்மனுதாரர் ஏழு மாதம் கர்ப்பமாக இருந்த சமயத்தில் "தனது பெற்றோர் வீட்டிற்கு தான் செல்ல வேண்டும், "நீ பார்த்துக் கொண்டது போதும் என்னை எனது பெற்றோர் பார்த்துக் கொள்வார்கள்," என்று கூறியதால் மனுதாரரும் எதிர்மனுதாரரும் மீண்டும் எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்று தங்கி அங்கிருந்தே வேலைக்கு சென்று வந்ததாகவும், அந்த சமயத்தில் சில காரணங்களால் அந்த நிறுவனமானது மூடப்பட்டதால் மனுதாரருக்கு வேலை இல்லாமல் போய்விட்டதாகவும், பின்பு மேட்டுர் அனல் மின் நிலையத்தில் காண்ட்ராக்ட் லேபர் ஆகவும், ஷட் டவுன் காலகட்டத்தில் ஊழியராகவும்

பணிபுரிந்து வந்ததாகவும், கடந்த 18.10.2018 ம் தேதி தனக்கும் எதிர்மனுதாரருக்கும் இரண்டு ஆண் குழந்தைகள் கோயமுத்தூரில் உள்ள கே.ஜி மருத்துவமனையில் பிறந்தாகவும், குழந்தை பிறந்த பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுதாரரையும் பிறந்த இரண்டு மகன்களையும் நல்ல முறையில் பராமரித்து வந்ததாகவும், பின்பு சென்னையில் உள்ள தனியார் தொலைக்காட்சியில் கடந்த 14.11.2018 ம் தேதி வேலைக்கு சேர்ந்து சுமார் ஒரு வருடமாக பணிபுரிந்து வந்ததாகவும், அந்த சமயத்தில் ஒவ்வொரு வாரமும் எதிர்மனுதாரரையும் தனது பிள்ளைகளையும் பார்க்க சூலூர் சென்று பிள்ளைகளையும் பராமரித்து வந்ததாகவும், பின்பு மனுதாரர் சுயமாக தொழில் தொடங்கலாம் என்று நினைத்து XYLO- கார் 03.06.2019 ம் தேதி வாங்கி மேட்டுர் அனல் மின் நிலையத்தில் கடந்த மூன்று வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் வண்டியினை இயக்கி வந்ததாகவும், கடந்த 2019 வருடம் மனுதாரர் எதிர்மனுதாரரையும் அவரது இரண்டு குழந்தைகளையும் மேட்டுருக்கு அழைத்து வந்து மனுதாரின் பெற்றோருடன் கூட்டுக் குடும்ப வாழ்க்கையினை மேற்கொண்டு வந்ததாகவும், சுமார் ஒரு மாதம் மட்டுமே எதிர்மனுதாரர் மனுதாரருடன் சந்தோஷமான முறையில் வாழ்ந்துள்ளதாகவும், பின்பு எதிர்மனுதாரர் "உனது பெற்றோருடன் கூட்டுக் குடும்ப வாழ்க்கை வாழ மாட்டேன், அவர்கள் வீட்டை விட்டு சென்றால் தான் உன்னுடன் நான் வாழ்வேன்," என்று எதிர்மனுதாரர் தினம் தினம் சண்டை செய்து வந்ததனால் மனுதாரரின் பெற்றோர் மட்டும் தனியாக வீடு எடுத்து சென்று விட்டதாகவும், எதிர்மனுதாரர் மாதத்தில் பத்து நாட்கள் மட்டுமே மனுதாரருடன் நல்ல முறையில் வாழ்ந்து வந்ததாகவும், தினம் தினம் சண்டை செய்து கொண்டு தனது பெற்றோர் வீட்டிற்கு செல்வதினை வாடிக்கையாக வைத்துள்ளதாகவும், எதிர்மனுதாரர் நன்றாக இருக்க வேண்டும் அவருடன் நல்ல முறையில் வாழ வேண்டும் என்று எதிர்மனுதாரர் சொல்லும் அனைத்து விருப்பங்களையும் செய்து கொடுத்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் வீட்டு வேலைகளை செய்ய மறுத்தும் மனுதாரருக்கு சமைத்துக் கொடுக்க மறுத்தும் ஹோட்டலில் வாங்கி வந்து சாப்பாடு கொடுக்கும்படி மனுதாரரை கட்டாயப்படுத்தியதாகவும், கடந்த 2020 ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் மனுதாரருக்கு வேலைவாய்ப்பு இல்லாத சமயத்தில்

எதிர்மனுதாரரையும் தனது பிள்ளைகளையும் கவனிக்க வேண்டும் என்று வெளியில் கடன் வாங்கி எதிர்மனுதாரரை நல்லமுறையில் கவனித்து வந்ததாகவும், மனுதாரரின் நிலையை கண்டு எதிர்மனுதாரர் தனது அம்மாவிடம் கூறி பணம் பெற்று தருகிறேன் என்று கூறியதாகவும், அதற்கு மனுதாரர் மறுப்பு தெரிவித்தும் "பரவாயில்லை எனது அம்மா எனக்காக என்ன வேணாலும் செய்வாங்க" என்று கூறி இளம்பிள்ளையில் உள்ள ரகு என்பரிடம் பாண்டு பேப்பரில் கையெழுத்து இட்டு ஒரு லட்சத்து 25 ஆயிரம் கடனாக பெற்றதாகவும், கடனாக பெற்ற பணத்தை மனுதாரர் வண்டியின் மாத தவணையை கட்டி வந்தும் மீதி பணத்தில் எதிர்மனுதாரருக்காகவும், பிள்ளைகளுக்காகவும் செலவு செய்து வந்ததாகவும், மனுதாரர் பெற்றோர் தனியாக வாழ்ந்து வந்ததால் அவர்கள் மனுதாரரை எந்த வகையிலும் எதிர்பார்த்து இல்லாமல் வாழ்ந்து வந்துள்ளதகாவும், மனுதாரர் தனியாக வருமானம் ஈட்டி எதிர்மனுதாரரையும், மகன்களையும் நல்லமுறையில் கவனித்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் பிள்ளைகளுக்கு காது குத்த வேண்டும் என்று கேட்டதற்கு மனுதாரரும் ஒப்புக்கொண்டு மனுதாரரின் குலதெய்வ கோயிலிலே எதிர்மனுதாரர் அவரது பெற்றோர், அனைத்து உறவினர்களையும் அழைத்து நல்ல முறையில் சிறப்பாக இரு குழந்தைகளுக்கும் மொட்டையடித்து காது குத்தியும் சிறப்பாக காது குத்தல் விழா நடத்தியதாகவும், விழாவிற்கு வந்த எதிர்மனுதாரரின் பெற்றோர் பேச்சினை கேட்டுக்கொண்டு எதிர்மனுதாரர் மனுதாரருடன் சண்டை செய்து கொண்டு இரவு என்றும் பாராமல் தனது தாலியினை கழட்டி மனுதாரரின் பெற்றோர் கையிலேயே கொடுத்துவிட்டு தனது பெற்றோருடன் எதிர்மனுதாரர் தாமாகவே இரு குழந்தைகளையும் அழைத்து கொண்டு சூலூர் சென்றுவிட்டதாகவும், சூலூர் சென்ற எதிர்மனுதாரரை பார்க்க மனுதாரர் நேரில் சென்ற போதும் எதிர்மனுதாரர் மனுதாரரை மதிக்காமல் வீட்டை விட்டு வெளியே தள்ளியும் அவமானப்படுத்தியும், எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் மனுதாரரிடம் அருவருக்கத்தக்க முறையில் பேசி சண்டை செய்து மனுதாரரை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டதாகவும், மனுதாரர் பிள்ளைகளை பார்க்க வேண்டும் காட்டுங்கள் என்று கேட்டதற்கு கூட பிள்ளையை காட்ட முடியாது என்று

கடுமையான வார்த்தைகளால் பேசி வெளியேற்றிவிட்டதகாவும், சுமார் ஒரு வருடம் கழித்து கடந்த 2022 வருடம் எதிர்மனுதாரரை சமாதனப்படுத்தி மகன்களுடன் ஒன்றாக சேர்ந்து வாழ வேண்டும் என்று கூறி மனுதாரர் எதிர்மனுதாரரை அழைத்து வந்து தனியாக மேட்டுரில் இருவரும் வாழ்ந்து வந்ததாகவும், கடந்த 18.10.2022ம் தேதி மனுதாரர் தனது மகன்களின் பிறந்தநாளுக்கு குழந்தைகளுக்கும், எதிர்மனுதாரருக்கும் புது துணிமணிகளை வாங்கி கொடுத்தும் அவர்களை வெளியே அழைத்துச் சென்று வேண்டிய சவரட்சனைகளை செய்து நல்ல முறையில் கவனித்து வந்ததாகவும், சுமார் ஒரு வருடம் மட்டுமே எதிர்மனுதாரர் மனுதாரருடன் நல்ல முறையில் இருந்துள்ளதாகவும், பின்பு எதிர்மனுதாரர் இங்கு இருக்க வேண்டாம் கோயமுத்தூர் சென்று விடலாம் என்று தினம் தினம் சண்டை செய்து வந்துள்ளதாகவும், மனுதாரரின் ஆசைக்காக எதிர்மனுதாரரும் கோயமுத்தூரில் ஏதாவது வேலை கிடைக்குமா என்று தேடி பொள்ளாட்சியில் உள்ள நவமலையில் அமைந்துள்ள TANGEDCO-ல் ஒப்பந்த அடிப்படையில் வாகனம் ஓட்ட அனுமதி கிடைத்து நவமலையில் தனியாக வீடு எடுத்து மனுதாரரை அழைத்த போது மனுதாரர் "என்னால் அங்கு எல்லாம் வர முடியாது எனது பெற்றோர் வீட்டிற்கு நீ வா" என்று கூறி எதிர்மனுதாரருடன் சண்டை செய்து கொண்டு மீண்டும் மனுதாரர் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளதாகவும், எதிர்மனுதாரர் வாகனம் ஓட்ட டெண்டர் எடுத்துவிட்டதால் அதனை ரத்து செய்யமுடியாமல் எதிர்மனுதாரர் மட்டும் தனியாக 2023ம் வருடத்தில் இருந்து தனியாகவே வாழ்ந்து வந்துள்ளதாகவும், இடைப்பட்ட காலகட்டத்தில் மனுதாரரை அழைத்து வர மனுதாரரின் பெற்றோர் வீட்டிற்கு சென்றாலும் மனுதாரர் "உன்னுடன் வர முடியாது நீ இங்கு வா டெண்டரை கேன்சல் செய்துவிட்டு எங்களுடன் வந்து இரு" என்று சண்டை செய்தும் மகன்களை காட்ட மாட்டேன் என்று வீண் பிடிவாதம் பிடித்து எதிர்மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் காயப்படுத்தியதாகவும், மனுதாரரின் தவறான நடவடிக்கைகளை மன்னித்து இரண்டு மைனர் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்காக எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழவே விருப்பப்படுவதாகவும், மைனர் மகன்கள் ஜெய்

ஆதவ், ஜெய் அகான் எதிர்மனுதாரரிடம் இருப்பதால் மனுதாரரை தந்தை என்று கூட அடையாளம் காண முடியாத சூழ்நிலை ஏற்பட்டு ரத்த உறவு பிளவுபடும் சூழ்நிலையில் உள்ளதாகவும், மேற்படி மைனர் மகன்களை பொது இடத்தில் வைத்து பார்க்க, பழக மனுதாரருக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தால் மைனர் மகன்கள் ஜெய் ஆதவ், ஜெய் அகான் மனுதாரருடன் நல்ல முறையில் பழகி இருவருக்கும் இடையில் இணக்கமான சூழ்நிலை உருவாகும் என்பதால் மேற்படி மகன்களை நீதிமன்றம் உத்தரவிடும் இடத்தில் பார்க்கவும் பழகவும் சனி, ஞாயிறு தேதிகளில் இடைக்காலமாக மனுதாரர் அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்று பராமரிக்கவும், மேலும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சுமூகமான முறையில் வாழாமல் எதற்கெடுத்தாலும் "என் அம்மா எனக்கு எல்லாம் நல்லது செய்கிறார்கள், நான் அவர்களுடனே சென்று வாழ்கிறேன்" என்று கூறிக்கொண்டு அடிக்கடி வீட்டை விட்டு வெளியேறி அவரது பெற்றோர் வீட்டில் தங்கிக் கொள்வதும் மைனர் குழந்தைகளை எடுத்துச் சென்று அவரது பெற்றோர் பாதுகாப்பிலேயே வைத்துக்கொள்வதும் குழந்தைகளின் நலன் மீது மனுதாரர் அக்கறை இல்லாமல் இருப்பது போல் குழந்தைகளை மனுதாரரிடம் காட்ட மறுப்பதும் மனுதாரர் அவரது குழந்தைகளை பார்க்கச் சென்றால் மனுதாரரை வீட்டை விட்டு வெளியே போகும்படி கூறி அவமானப்படுத்தி மனதளவிலும், உடலளவிலும் பல்வேறு சித்தரவதை செய்ததாகவும், கடந்த 2022ம் வருடம் டெண்டர் போடுவதற்காக காத்திருந்த சமயத்தில் எதிர்மனுதாரர் மனுதாரரை போன் மூலம் அழைத்து "இங்கு வந்து தங்கி நமது குழந்தைகளை பார்த்துக்கொள் நான் வேலைக்கு செல்கிறேன் அதனால் குழந்தைகளை பார்க்க முடியவில்லை" என்று கூறியதன் அடிப்படையில் மனுதாரர் மேட்டுரில் இருந்து கோயம்புத்தூர் சென்று எதிர்மனுதாரர் வீட்டில் குழந்தைகளை பார்த்து பராமரித்து வந்ததாகவும், 10 நாட்கள் தான் மனுதாரரின் மாமியாரும், எதிர்மனுதாரரும் சுமூகமான முறையில் நடந்து கொண்டதாகவும், மனுதாரர் வேலையில்லாமல் வெட்டியாக அவர்கள் வீட்டில் இருப்பதாக எதிர்மனுதாரர் "தனது அம்மாவுக்கு நீ தொந்தரவு கொடுக்கிறாய்" என்ற கூறி வீண் சண்டை செய்து மனுதாரரை வலுக்கட்டாயமாக அவர்கள் வீட்டில் இருந்து வெளியேற்றி அனுப்பிவிட்டதாகவும், பின்பு மனுதாரர்

குழந்தைகளை பார்ப்பதற்காக பலமுறை கோயம்புத்தூர் சென்றபோதெல்லாம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது அம்மா மனுதாரரை வீட்டை விட்டு வெளியே துரத்தி அடித்து "உனக்கு எதுக்குடா பிள்ளை யார் பிள்ளையடா பார்க்க வந்திருக்கிறாய் இனிமேல் குழந்தைகளை பார்க்க இங்கு வந்தால் வேறு மாதி பிரச்சினையாகும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்து உன்னை ஜெயிலில் தள்ளிவிடுவேன்" என்று தகாத வார்த்தைகளால் திட்டி மனுதாரரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டதாகவும், மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்பு போன் மூலமாக மனுதாரர் மகன்களிடம் பேச முற்பட்டபோதும் எதிர்மனுதாரர் அதை அனுமதிக்க முடியாமல் தகாத வார்த்தைகள் பேசி "என் பிள்ளைகளுக்கு நீ அப்பனே இல்லை, குழந்தை உனக்கு தான் பிறந்ததா என்று நான் தான் சொல்ல வேண்டும், நீ எதற்கு எனக்கு போன் செய்கிறாய், போனை வைடா" என்று போனை கட் செய்து விட்டதாகவும், மேலும் மனுதாரர் குழந்தைகளின் வளர்ப்பினை நேரடியாக பார்க்க முடியவில்லை, அவர்களை பார்த்து அன்பு செலுத்த முடியாமல் மிகுந்த மனவேதனையில் இருந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துவிட்டதால் அதன் பின்பு குழந்தைகளை எக்காரணம் கொண்டும் மனுதாரரிடம் காண்பிக்க முடியாது என்றும், வழக்கு இருக்கும்போது இங்கு வரக்கூடாது என்று வழக்கினை காரணம் காட்டி மனுதாரரை குழந்தைகளை பார்க்க விடாமல் செய்துவிட்டதாகவும், தந்தையின் உறவும், பாசமும் உடல் நலன் பராமரிப்பு மேற்படி மனுதாரரின் மைனர் குழந்தைகளுக்கு தேவைப்படுவதால் அவரை இடைக்காலமாக மனுதாரர் வசம் ஒப்படைக்க, பார்க்க, பழக, மனுதாரரின் மகன்கள் மைனர்களுக்கு மனுதாரர் இயற்கை காப்பாளராகவும், தந்தையாகவும் இருந்து செய்ய வேண்டிய கடமையில் உள்ளதாலும், தந்தையின் அன்பும், அரவணைப்பும் கிடைக்காமல் மகன்கள் பிற்காலத்தில் மிகுந்த மன உளைச்சலுக்கும் சிரமத்திற்கும் ஆட்பட்டு விடுவதாகவும், தகப்பனார் என்ற உறவு முறையே மைனர் மகன்களுக்கு தெரியவில்லை என்றும், மேற்படி சூழ்நிலையில் மைனர் மகன்களுக்கு அன்பும் ஆதரவும் செலுத்த வேண்டிய கடமையில் உள்ளதால் மேற்படி மைனர் மகன்கள் ஜெய் ஆதவ், ஜெய் அகான் இருவரையும்

இடைக்காலமாக பார்க்க, பழக, பேச முடிவு செய்து நீதிமன்ற உத்தரவை பின்பற்றி நடக்க மனுதாரர் தயாராக இருப்பதால் மனுதாரரின் மைனர் மகன்களை இடைக்காலமாக பார்க்க, பழக, பேச வேண்டி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

கடந்த 31.08.2017ம் தேதி தங்கமாபுரிப்பட்டினம் முருகன் கோவிலில் திருமணம் நடைப்பெற்றதாகவும், எதிர்மனுதாரர் விருப்பப்படியே கோயம்புத்தூரில் உள்ள அவரது பெற்றோர் வீட்டில் குடும்பம் நடத்தியுள்ளதாகவும், நெருங்கிய உறவினர் மகனான மனுதாரர் மீது மிகுந்த அன்பும், பாசமும் கொண்ட எதிர்மனுதாரர் இனிமையான இல்லற வாழ்கை வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் திருமண வாழ்வை தொடர்ந்துள்ளதாகவும், ஜாதகத்தில் சில தோசங்கள் உள்ளதால் அதனை சரிசெய்ய தான் மூன்று முறை திருமணம் செய்ததாகவும், திருமணமான சில நாட்கள் மட்டும் அமைதியான முறையில் இல்லற வாழ்வை மேற்கொண்டு வந்த மனுதாரர் பின்னிட்டு சரிவர வேலைக்கு செல்லாமல் வீட்டிலேயே பொழுதை கழிப்பதும் மதுபோதைக்கு தம்மை உட்படுத்திக்கொண்டு, பல்வேறு போதை பொருட்களை வெளியிலிருந்து வாங்கி அதனை அதிகளவு பயன்படுத்திக்கொண்டு, எதிர்மனுதாரரிடம் மனுதாரர் பணம், நகை கேட்டு பிரச்சனைகள் செய்து சண்டை சச்சரவுகள் செய்வதை வழக்கமாக கொண்டிருந்ததாகவும், பின்பு மனுதாரர் கோயம்புத்தூரில் இருந்தால் தனக்கு நேரம் சரியில்லை எனவும், தனிவீடு பார்த்து குடிவைத்தால் நல்லமுறையில் வாழ்வதாக எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோரிடம் உறுதி வழங்கியதாகவும், அதனால் சுந்தாரபுரம் அன்னை வேளாங்கண்ணி நகரில் இருவரையும் குடியமர்த்தி அனைத்து உதவிகளையும் எதிர்மனுதாரர் குடும்பத்தினர் செய்த நிலையில் அச்சமயத்தில் கருவுற்றிருந்த எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான மருத்துவ உதவிகளையும் மனுதாரர் செய்ய தவறிய காரணத்தினால் வாரம் இரண்டு முறை எதிர்மனுதாரரின் குடும்பத்தார் எதிர்மனுதாரருக்கு உரிய மருத்துவ உதவிகளை சொந்த செலவில் செய்து வந்ததாகவும், கர்ப்பினியான

மனைவிக்கு செய்ய வேண்டிய அடிப்படை கடமைகளையும், பொறுப்புகளையும் மறந்து தான் மட்டும் சுகபோக வாழ்வு வாழ வேண்டும் என்ற தீய எண்ணத்தில் மது, புகை பழக்கத்தில் மனுதாரர் தம்மை உட்படுத்திக்கொண்டு மனம்போன போக்கில் வாழ்ந்து வந்ததாகவும், இந்நிலையில் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் வேலை கிடைத்துவிட்டது என்று கூறி கடந்த 18.10.2018 ல் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்த சமயத்தில் கணவன் என்ற முறையிலும், இரண்டு குழந்தைகளுக்கு தந்தை என்ற முறையிலும் உடன் இருந்து பார்த்துகொள்ள வேண்டிய கடமையினையும், பொறுப்பினையும் தவிர்த்து மேட்டூரில் இருந்த மனுதாரர் சில நாட்கள் கழித்து வந்தே இரண்டு குழந்தைகளையும் பார்த்ததாகவும், மேற்படி குழந்தைபேறு செலவுகள் அனைத்தையும் எதிர்மனுதாரரின் குடும்பத்தினரே ஏற்று செய்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் தனக்கு நல்ல வாழ்வு கிடைத்துவிட்டது என்றும், மனுதாரருக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் கூட எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்பினை பெற்று மனம் திருந்தி வாழ்வார் என்ற நல்ல நம்பிக்கையில் செயல்பட்டு வந்த நிலையில், மனுதாரர் மதுபோதை பழக்கங்களில் இருந்து வெளியே வர வேண்டும் என எதிர்மனுதாரர் அறிவுரைகளை கூறினாலும் ஏற்றுக்கொள்ளாமல், பல சமயங்களில் தனக்கு நல்லவேலை கிடைத்துவிட்டது என்றும், பின்னர் தனக்குரிய வேலை கிடைக்கவில்லை என்று சொல்லியும் தனிப்பட்ட முறையில் தொழில் தொடங்குவதற்கு முதலீடு தேவை என்று மனுதாரர் பெற்ற கடன்களை எதிர்மனுதாரரின் குடும்பத்தினர் திரும்ப செலுத்தி வந்ததாகவும், அடிக்கடி தன்னை விவாகரத்து செய்துக்கொள்ளும் படி சொல்லி வந்த மனுதாரர் இறுதியில் எதிர்மனுதாரரை நேரடியாக சந்தித்து அவரது உடல்தோற்றத்தை மிக கேவலமாக பேசி "தனது அழகுக்கு ஏற்றவகையில் நீ இல்லையென சொல்லி தான் விவாகரத்து பெற்றுக்கொண்டு வேறொரு பெண்ணை திருமணம் செய்துக்கொள்ளபோவதாக கூறியதோடு, தனது செல்போன் மூலமாக எதிர்மனுதாரர் செல்போனுக்கு டைவர்ஸ் தர வேண்டும்" என சொல்லி குறுஞ்செய்திகளை அடிக்கடி அனுப்பி எதிர்மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் மிகுந்த தொல்லைகள் செய்து சித்ரவதைகள் செய்து வந்த காரணத்தால் எதிர்மனுதாரர் விவாகரத்து கேட்டு மனு

தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்படி விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன்பு மனுதாரர் எதிர்மனுதாரர் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை தேவைகள், கடமைகள், மருத்துவம், கல்வி உள்ளிட்ட தேவைகளை கூட சரிவர செய்து வராமல், எதிர்மனுதாரரின் கணவர் என்ற முறையிலும், குழந்தைகளின் தந்தை என்ற முறையிலும் உரிய அன்பினையும், பாசத்தினையும் செய்யாமல் போதை பழக்கத்திற்கு தம்மை உட்படுத்திக்கொண்டு, பணத்தையெல்லாம் தனது சுயநல இன்பத்திற்கு மட்டுமே பயன்படுத்திக்கொண்டு இருந்ததாகவும், எதிர்மனுதாரர் அனைத்து தேவைகளுக்கும் தனது பெற்றோர்களை சார்ந்திருக்க கூடாது என்ற நல்லெண்ணத்தில் தன்னிச்சையாக குழந்தைகளின் நலன் கருதி தற்சமயம் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருவதாகவும், பணிவாய்ப்பின் பலனை பெற்று வழக்கம் போல் சுயநலத்துடன் தான் மட்டும் சுகபோக வாழ்வு வாழ வேண்டும் என்ற தீய எண்ணத்தில் குழந்தைகள் மீதும், மனைவியான எதிர்மனுதாரர் மீதும் அன்பும், பாசமும் இல்லாத மற்றும் மனைவி, குழந்தைகளுடன் சேர்ந்து இனிமையான இல்லறவாழ்வை வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாத மனுதாரர் தற்சமயம் குழந்தைகள் மீது அக்கறை கொண்டவர்போன்று பொய்யான தோற்றத்தை உருவாக்கி மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எந்தவிதமான பணி வாய்ப்பும் இல்லாத தீய குணங்களுக்கு தன்னை உட்படுத்திக்கொண்டு, மதுபோதைக்கு அடிமையாகியிருந்த மனுதாரர் வசம் குழந்தைகள் இருந்தால் அது குழந்தைகளின் நலனுக்கும், அவர்களது எதிர்கால நலனுக்கும் தீங்காக அமைந்துவிடும் என்பதால், மனுதாரரின் பெயரைச்சொன்னாலே நடுங்கி அழ ஆரம்பிக்கும் அச்சம் அடையும் மனநிலையில் உள்ள குழந்தைகளை மனுதாரர் பராமரிப்பில் விடுவது நீதிக்கும், நலனுக்கும் உகந்த ஒன்றல்ல, எனவே இந்த மனுவினை அதிகப்பட்ச செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி குறிப்பிடப்பட்டுள்ளது.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த ஒரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. எந்த சான்றாவணமும் குறியீடு செய்யப்படவில்லை.

5) **<u>பிரச்சினைக்குத் தீர்வு:</u>**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே நம் ஆய்விற்குட்பட்ட கருப்பொருளாகும்.

6) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது.

மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரின் மைனர் மகன்கள் ஜெய் ஆதவ், ஜெய் அகான் ஆகியோரை எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தாரும் பார்க்க அனுமதிக்கவில்லை என்றும், எனவே மைனர் மகன்கள் ஜெய் ஆதவ் மற்றும் ஜெய் அகான் ஆகியோரை பார்க்க அனுமதிக்கக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில், மனுதாரருக்கு குழந்தையின் மேல் எந்த ஒரு பாசமோ, அன்போ, அக்கறையோ கிடையாது என்றும், அவர்களுக்குரிய அடிப்படை தேவைகளை கூட மனுதாரர்/எதிர்மனுதாரர் செய்யவில்லை என்றும், தந்தை என்ற முறையில் குழந்தைகளுக்கான கடமைகள் எதையும் செய்யாமலும், அவர்களை எந்த விதத்திலும் பராமரிக்காமலும், குழந்தைகள் மீதும் மனைவியான எதிர்மனுதாரர் மீதும் அன்பும், பாசமும் இல்லாத, மேற்படி குழந்தைகள் மற்றும் மனைவியுடன் இணைந்து இனிமையான இல்லற வாழ்வை வாழ வேண்டும் என்ற எந்த எண்ணமும் இல்லாத மனுதாரர்/எதிர்மனுதாரர், சட்ட முறையற்ற மறுபயன் கருதி தற்சமயம் குழந்தைகள் மீது அக்கறை கொண்டவர் போன்று பொய்யான தோற்றத்தை உருவாக்கி, பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மனுதாரர் கோரிய பரிகாரம் கிடைக்கக்தக்கதல்ல என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7) அவ்வாறிருக்க, (2017) 11 Supreme Court cases 493 Manoj Anslem Rebeiro Vs. Candace Elizebath Rebeiro என்ற வழக்கில், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

> " Having heard the learned counsel on both sides, we find that whatever be the background of the case, it

cannot be so acrimonious so as to deny the right of the father to see his daughter. Therefore, we direct the respondent to produce the child in the Family Court, Thiruvananthapuram, on the 3rd Saturday of every month at 11.00 a.m and permit the child to interact with the father up to 1.00 p.m. It will be open to the grandparents also to be present along with the father.

We make it clear that in view of the highly estranged relationship among the parties, the Family Court will see that the child is not taken outside the premises of the Family Court, but at the same time, the father along with the grandparents could get some time to interact with the child in the premises of the Family Court. "

8) அவ்வாறிருக்க, மனுதாரர் /எதிர்மனுதாரர் தரப்பில், குழந்தைகளை பார்ப்பதற்காக பலமுறை சென்றபோதெல்லாம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது அம்மா அவரை வீட்டை விட்டு வெளியே துரத்தி அடித்ததாகவும், தகாத வார்தைகளால் திட்டியதாகவும் எதிர்மனுதாரரும் அவரது அம்மாவும் மனுதாரர் தனது இரண்டு மகன்களையும் பார்க்கவிடாமல் தொடர்ந்து தடுத்து வருவதாகவும், போன் மூலம் பேச முற்பட்ட போதும் அனுமதிக்காமல் தகாத வார்த்தைகள் பேசி இணைப்பை துண்டித்துவிட்டதாகவும், குழந்தைகளை மேலும் பார்க்க முடியாமல் மனுதாரர் மிகுந்த மனவேதனையில் இருந்து வருவதாகவும், மைனர் மகன்களுக்குதான் இயற்கை காப்பாளராகவும், தந்தையாகவும் இருந்து செய்ய வேண்டிய கடமை உள்ளதாகவும், தனது மகன்களுக்கு தந்தையின் அன்பும், அரவணைப்பும் கிடைக்காமல் போனால் அவர்கள் பிற்காலத்தில் மிகுந்த மன உளைச்சலுக்கும், சிரமத்திற்கும் உள்ளாவார்கள் என்றும் கூறியுள்ளார். மேலும், மனுதாரர்/எதிர்மனுதாரர், மேற்படி மைனர் மகன்களின் தகப்பனார் என்ற முறையில் அவர்களை பார்க்க அவருக்கு உரிமையுள்ளது. கடந்த 18.10.2018 ம் தேதியில் மேற்படி இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது மேற்படி குழந்தைகளுக்கு சுமார் 6 1/2

வயதாகிறது. எனவே, மனுதாரர்/எதிர்மனுதாரர், அவரது மகன்களான மைனர் ஜெய் ஆதவ் மற்றும் ஜெய் அகான் ஆகியோரை ஒவ்வொரு மாதமும் முதலாவது சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 மணிவரை பார்த்துக் கொள்ள அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு, அசல் மனு HMOP.108/2023 முடிவடையும் காலம் வரை, மனுதாரர்/எதிர்மனுதாரர், அவரது மைனர் மகன்களான ஜெய் ஆதவ் மற்றும் ஜெய் அகான் ஆகியோரை ஒவ்வொரு மாதமும், முதலாவது சனிக்கிழமை, காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை மேட்டுர் வட்ட சட்ட பணிகள் குழு, (TLSC,Mettur) அலுவலகத்தில் வைத்து, பார்த்துக் கொள்ளலாம் என்றும், எதிர்மனுதாரர்/மனுதாரர், மைனர் மகன்களான ஜெய் ஆதவ் மற்றும் ஜெய் அகான் ஆகியோரை மேற்படி நாட்களில் மேட்டுர் வட்ட சட்ட பணிகள் குழு (TLSC,Mettur) அலுவலகத்திற்கு அழைத்து வந்து காண்பித்து விட்டு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஜீன் மாதம் 11ம் நாள் புதன்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**Sd/- A.Shanmugapriya**

சார்பு நீதிபதி,
மேட்டூர்

**மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:** இல்லை
**எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்:** இல்லை

**Sd/- A.Shanmugapriya**

சார்பு நீதிபதி,
மேட்டூர்